குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மயிலாடுதுறை

**முன்னிலை : திரு. K. கமலநாதன், B.Sc., B.L.,**

விரைவு குற்றவியல் நீதிமன்றம், மயிலாடுதுறை.

நீதித்துறை நடுவர் எண்.1, மயிலாடுதுறை. (மு.கூ.பொ)

2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் ஆனி திங்கள் 29 ஆம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் நாள் திங்கட்கிழமை

**C.N.R.No.TNMY02-000312-2022**

D.V.C.No. 44/2022

1) மோனிஷா, வயது 30/2022

த/பெ. ஜெயசங்கர்,

க/பெ. கார்த்திக்,

க.எண்.3/290 சீர்காழி மெயின்ரோடு,

சேந்தங்குடி, மயிலாடுதுறை.

2) மைனர் கீர்த்திவாசன் வயது 04

( 2 ம் மைனருக்காக பாதுகாவலரும்

தாயாருமான முதல்

மனுதாரர் மூலம்) ....... மனுதாரர்கள்

**// எதிர் //**

கார்த்திக், வயது 32/2022

த/பெ. கைலாசம்,

சொர்ணாம்பாள் நகர்,

அம்மாசத்திரம், கும்பகோணம்,

தஞ்சாவூர். ....... எதிர்மனுதாரர்

இந்த மனு இந்நீதிமன்றம் முன்பாக 20.05.2026ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. N.K. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. இளையராஜா அவர்கள் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதத்தை பரிசீலித்தும் ஆவணங்களைப் பரீசிலித்தும், இதுநாள்வரை இந்தவழக்கு இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**// உத்தரவு//**

மனுதாரர் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005, சட்டப்பிரிவுகள் 18, 19, 19(8), 20, 22ன் கீழ் பாதுகாப்பு, உறைவிடம், சீதனப் பொருட்கள் ஒப்படைப்பு, பணஉதவி மற்றும் இழப்பீடு கட்டளை கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

2.1 1-ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 17.09.2015-ம் வருடம் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது 1-ம் மனுதாரருக்கு அவரது பெற்றோர்கள் 24 பவுன் நகை, எதிர்மனுதாரருக்கு 6 பவுன் நகை மேலும் சில்வர் பாத்திரங்கள் மற்றும் பித்தளை பாத்திரங்கள் தனியாக திருமண சீர் வரிசையாக கொடுக்கப்பட்டது. மேலும் எதிர்மனுதாரருக்கு வாகனம் வாங்குவதற்காக ரூ.80,000/-ம் ரொக்கமாக கொடுக்கப்பட்டது. 1-ம் மனுதாரரின் பெற்றோர்கள் ரூ.5,00,000/-ம் வரை செலவு செய்து திருமணம் செய்து வைத்துள்ளார்கள்.

2.2 திருமணத்தின் போது எதிர்மனுதாரர் D.I.C.E. படித்து சிங்கப்பூரில் பெயர் குறிப்பிடாத கம்பெனியில் வேலை செய்து மாதம் ரூ.2,00,000/-ம் சம்பாதித்து வருவதாகவும், திருமணம் முடிந்து 3 மாதங்கள் கழித்து எதிர்மனுதாரர் வெளிநாடு சென்ற பிறகு 1-ம் மனுதாரர் கருவுற்றிருந்தார். எதிர்மனுதாரர் 1-ம் மனுதாரரிடம் சொல்லாமலும் எந்த விபரமும் தெரிவிக்காமலும், 4 மாதங்கள் கழித்து சிங்கப்பூரிலிருந்து இந்தியா வந்துவிட்டார். இதனைபற்றி 1-ம் மனுதாரர் எதிர்மனுதாரரிடம் கேட்டதற்கு என் சொந்த விஷயங்களில் தலையிடக்கூடாது

என்றும், வேலை சம்மந்தமாக என்னிடம் எந்த கேள்வியும் கேட்கக்கூடாது அப்படி நீ கேட்டால் உன் பெற்றோர் வீட்டிற்கு நீ சென்றுவிடு என்று கூறியுள்ளார். எதிர்மனுதாரரின் தங்கை திருமண செலவிற்காக ரூ.5,00,000/–ம் 1–ம் மனுதாரரின் பெற்றோரிடமிருந்து வாங்கி வர வேண்டும் என்று எதிர்மனுதாரர் கூறியுள்ளார். அதற்கு 1–ம் மனுதாரர் அவ்வளவு தொகை தன் பெற்றோரிடம் இருக்காது என்று கூறியதற்கு எதிர்மனுதாரர் கோபமுற்று குடித்துவிட்டு வந்து 1–ம் எதிர்மனுதாரரை தலையில் அடித்து காயம் ஏற்படுத்தி உள்ளார். 1–ம் மனுதாரரின் தகப்பனார் 28.12.2016–ந் தேதி ரூ.1,50,000/–ம் வரதட்சணை பணமாக எதிர்மனுதாரரிடம் கொடுத்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரர் 1–ம் மனுதாரரை கொடுமைப்படுத்தி வந்துள்ளார். எதிர்மனுதாரரின் தங்கையின் திருமணம் நடந்து முடிந்த சில நாட்களில் எதிர்மனுதாரின் தங்கையின் கணவர் வீட்டில் பிரச்சனை ஏற்பட்டதை 1ம் மனுதாரரின் தந்தையை எதிர்மனுதாரரின் தங்கையின் வீட்டிற்கு சென்று சமாதானம் பேச வரச்சொன்னதற்கு 1–ம் மனுதாரர் தன் அப்பா வரமாட்டார் என்று கூறியதை மனதில் வைத்துக் கொண்டிருந்த எதிர்மனுதாரர் போன் ஜார்ஜர் ஒயரால் 1–ம் மனுதாரரை அடித்து காயப்படுத்தியுள்ளார். 1ம் மனுதாரரை உன் தகப்பனார் வீட்டிற்கு சென்றுவிடு என்று இரண்டு முறை அடித்து கொண்டே கும்பகோணம் பேருந்து நிலையத்திலிருந்து பேருந்தில் ஏற்றி திருவிடைமருதூர் வரை வந்து மீண்டும் பேருந்திலிருந்து கீழே இறக்கி அடித்து நடந்தே எதிர்மனுதாரரின் வீட்டிற்கு வரச்சொல்லிவிட்டு, எதிர்மனுதாரர் மட்டும் தனியாக ஆட்டோவில் சென்றுள்ளார். எதிர்மனுதாரர் வேலைக்கு செல்வதில்லை அதனை பற்றி 1–ம் மனுதாரர் கேட்டால் அதற்கு வீண் தகராறு சண்டை போட்டுள்ளார்.

2.4 1–ம் மனுதாரர் 5 மாத கர்ப்பிணி என்று பாராமல் 2016–ம் வருடம் மார்ச் மாதத்தின் வாரத்தின் முதல் நாள் அன்று 1–ம் மனுதாரரிடம் எதிர்மனுதாரர் வீண் சண்டை போட்டு கொண்டு தான் Business செய்ய வேண்டும் என்றும் அதற்கு ரூ.10,00,000/–ம் தேவைப்படுகின்றது என்றும், உன் பெற்றோரிடம் சென்று வாங்கி வா அப்படி உன் பெற்றோர் ரூ.10,00,000/–ம் தரவில்லை என்றால் உன் பெற்றோர் வீட்டிலேயே தங்கிவிடு என்று கூறி 1–ம் மனுதாரரை அவரது பெற்றோர் வீட்டிற்கு எதிர்மனுதாரர் அனுப்பியுள்ளார். 1–ம் மனுதாரர் தன் பெற்றோர் வீட்டிற்கு வந்துள்ளார்.

அதன் பிறகு ஒன்பது மாத கர்ப்பிணியாக இருந்த போது 1–ம் மனுதாரருக்கு வளையகாப்பு இட வேண்டி எதிர்மனுதாரரிடம் கேட்டதற்கு வளையகாப்பு எல்லாம் இடமுடியாது முடிந்தால் உன் வீட்டிலேயே அந்த விசேஷத்தை நடத்திக் கொள் என்று கூறியுள்ளார். அதன் பிறகு 1–ம் மனுதாரருக்கு கடந்த 18.05.2017–ந் தேதி கீர்த்திவாசன் என்ற ஆண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தை பிறந்தவுடன் 2–மாதங்கள் கழித்து 1–ம் மனுதாரரின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களுடன் 1, 2 மனுதாரர்களை அழைத்து கொண்டு எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்று சமரசம் பேசி வரதட்சனை பணம் தருவதாக ஒப்புக் கொண்டு எதிர்மனுதாரர் வீட்டில் விட்டுவிட்டு வந்துள்ளார்கள்.

2.5 1–ம் மனுதாரருக்கு குழந்தை பிறந்த 5 மாதத்திற்கு பிறகு 1–ம் மனுதாராரின் பாட்டியுடன் எதிர்மனுதாரரின் வீட்டில் 1–ம் மனுதாரர் தனது குழந்தையுடன் வசித்து வந்துள்ளார்கள். மனுதாரர்கள் சென்ற இரண்டு நாட்களுக்கு பிறகு எதிர்மனுதாரர் சிங்கப்பூர் சென்றிருந்தவர் உடனே இந்தியா வந்துள்ளார். அப்போது 1ம் மனுதாரர் அவரது தம்பியுடன் போனில் பேசிக்கொண்டிருந்ததை பார்த்து எதிர்மனுதாரர் குடித்துவிட்டு கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த எதிர்மனுதாரர் திடீரென்று எழுந்து வந்து எவனுகிட்டடி பேசுற என்று காமக்குரோத வார்த்தைகளால் திட்டி, 1–ம் மனுதாரரை அடித்து துன்புறுத்தி அவர் தலைமுடியை பிடித்து இழுத்துக் கொண்டு கையில் குழந்தையுடன் வீட்டின் வெளியே தள்ள முயற்சித்துள்ளார். அப்பொழுது இந்த சண்டையை தடுக்க முற்பட்ட 1ம் மனுதாரரின் பாட்டியின் கண்ணத்தில் அறை விழுந்தவுடன் பாட்டி கீழே விழுந்து விட்டார். 1–ம் மனுதாரர் பாட்டியை தூக்குவதற்குள் எதிர்மனுதாரர் 1–ம் மனுதாரரை அடித்து வீட்டைவிட்டு வெளியே தள்ளிவிட்டுள்ளார். 1–ம் மனுதாரர் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் எதிர்மனுதாரரிடம் கேட்டதற்கு அவர்களை எதிர்மனுதாரர் அடிக்க வருவது மட்டுமல்லாமல் காமக்குரோத வார்த்தைகளால் திட்டி அசிங்கப்படுத்தியுள்ளார்.

2.6 எதிர்மனுதாரர் 1, 2 மனுதாரர்களையும் அழைத்து கொண்டு பெற்றோர் மற்றும் உறவினர்கள் சென்றுவிட வேண்டும் இல்லையெனில் 1, 2 மனுதாரர்களை அடித்தே கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியதன் காரணமாக 1–ம் மனுதாரரின் பெற்றோர்கள் மனுதாரர்களை தங்களது வீட்டிற்கு அழைத்து வந்துள்ளனர். இதுநாள்

வரை மயிலாடுதுறையில் 1–ம் மனுதாரர் தனது குழந்தையுடன் தன் தகப்பனார் வீட்டில் இருந்து கொண்டு கஷ்ட ஜீவனம் செய்து வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். எதிர்மனுதாரர் மனுதாரர்களை சரிவர பராமரிக்காமலும், உடை, உறைவிடம், உணவு, மருத்துவ செலவு ஆகியவற்றினை ஏதும் ஏற்பாடு செய்யாமல் எதிர்மனுதாரர் பெற்றோர் வீட்டில் வாழ்ந்து வருகிறார்.

2.7 1–ம் மனுதாரரின் சீதன பொருட்கள், நகைகள் எதிர்மனுதாரர் வசமே உள்ளன. எதிர்மனுதாரர் சிங்கப்பூரில் வேலை பார்த்து மாதம் ஒன்றுக்கு ரூ.2,00,000/–ம் வரை சம்பாதித்து வருகிறார். மேலும் எதிர்மனுதாரருக்கு ரூ.50,00,000/–ம் மதிப்பில் வீடும், ரூ.50,00,000/–ம் மதிப்பில் விளை நிலங்கள் உள்ளன. 1–ம் மனுதாரர் தனது குழந்தையுடன் தனது பெற்றோர் வீட்டில் வசித்துக் கொண்டு உணவு, உடை மருத்துவ செலவிற்காக மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார். எனவே, 1ம் மனுதாரர் எதிர்மனுதாரரிடமிருந்து குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் பரிகாரம் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. **<u>எதிர்மனுதாரரால் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை.</u>**

எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. இளையராஜா அவர்கள் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாததால் 22.11.2023ம் தேதியன்று எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**<u>4. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை</u>**

1. மனுதாரர் எதிர்மனுதாரர்களால் குடும்ப வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரா?
2. மனுதாரருக்கு பிரிவு 19 ன் கீழான உறைவிட ஆணை வழங்க வேண்டுமா?
3. மனுதாரருக்கு பிரிவு 19(8) குடும்ப வன்முறை சட்டப்படி மனுதாரரின் சீதனபொருட்கள் மற்றும் நகைகள் ஆகியவற்றை எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு திரும்ப ஒப்படைக்கும்படி உத்தரவு கிடைக்கதக்கதா?
4. மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் பிரிவு 20 குடும்ப வன்முறை சட்டப்படி பணஉதவி தொகை கொடுக்க கடமைப்பட்டவரா?

5. மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் பிரிவு 22ன் படி இழப்பீடு வழங்க வேண்டுமா?

6. வேறு என்ன பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது.

5. மனுதாரர் தரப்பில் மனுதாரர் திருமதி. மோனிஷா ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

**பிரச்சனை 1.**

6. மனுதாரர் தனது மனுவில், 1–ம் மனுதாரருக்கு திருமணத்தின் போது அவரது பெற்றோர்கள் 24 பவுன் நகை, எதிர்மனுதாரருக்கு 6 பவுன் நகை மேலும் சில்வர் பாத்திரங்கள் மற்றும் பித்தளை பாத்திரங்கள், எதிர்மனுதாரருக்கு வாகனம் வாங்குவதற்காக ரூ.80,000/–ம், 1–ம் மனுதாரரின் பெற்றோர்கள் ரூ.5,00,000/–ம் வரை செலவு செய்து திருமணம் செய்து வைத்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் D.I.C.E. படித்து சிங்கப்பூரில் பெயர் குறிப்பிடாத கம்பெனியில் வேலை செய்து மாதம் ரூ.2,00,000/–ம் சம்பாதித்து வருவதாகவும், எதிர்மனுதாரரின் தங்கை திருமண செலவிற்காக ரூ.5,00,000/–ம் 1–ம் மனுதாரரின் பெற்றோரிடமிருந்து வாங்கி வர வேண்டும் என்று எதிர்மனுதாரர் குடித்துவிட்டு வந்து 1–ம் மனுதாரரை தலையில் அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும், எதிர்மனுதாரர் 1–ம் மனுதாரை கொடுமைப்படுத்தி வந்துள்ளதாகவும், எதிர்மனுதாரின் தங்கையின் கணவர் வீட்டில் பிரச்சனை ஏற்பட்டதை 1ம் மனுதாரரின் தந்தை சமாதானம் பேச வரமாட்டார் என்று 1ம் மனுதாரர் கூறியதை மனதில் வைத்துக் கொண்டிருந்த எதிர்மனுதாரர் போன் ஜார்ஜர் ஒயரால் 1–ம் மனுதாரரை அடித்து காயப்படுத்தியுள்ளதாகவும், 1–ம் மனுதாரர் 5 மாத கர்ப்பிணி என்று பாராமல் 2016–ம் வருடம் மார்ச் மாதத்தின் வாரத்தின் முதல் நாள் அன்று 1–ம் மனுதாரரிடம் எதிர்மனுதாரர் வீண் சண்டை போட்டு கொண்டு தான் Business செய்ய வேண்டும் என்றும் அதற்கு ரூ.10,00,000/–ம் தேவைப்படுகின்றது என்றும், உன் பெற்றோரிடம் சென்று வாங்கி வா அப்படி உன் பெற்றோர் ரூ.10,00,000/–ம் தரவில்லை என்றால் உன் பெற்றோர் வீட்டிலேயே தங்கிவிடு என்று கூறி 1–ம் மனுதாரரை அவரது பெற்றோர் வீட்டிற்கு எதிர்மனுதாரர் அனுப்பியதாகவும், 1ம் மனுதாரர் அவரது தம்பியுடன் போனில் பேசிக்கொண்டிருந்ததை பார்த்து எதிர்மனுதாரர் குடித்துவிட்டு கட்டிலில்

படுத்துக் கொண்டிருந்த எதிர்மனுதாரர் திடீரென்று எழுந்து வந்து எவனுகிட்டடி பேசுற என்று காமக்குரோத வார்த்தைகளால் திட்டி, 1–ம் மனுதாரரை அடித்து துன்புறுத்தி அவர் தலைமுடியை பிடித்து இழுத்துக் கொண்டு கையில் குழந்தையுடன் வீட்டின் வெளியே தள்ள முயற்சித்துள்ளதாகவும், அப்பொழுது இந்த சண்டையை தடுக்க முற்பட்ட 1ம் மனுதாரரின் பாட்டியின் கண்ணத்தில் அறை விழுந்தவுடன் பாட்டி கீழே விழுந்து விட்டதாகவும், எதிர்மனுதாரர் 1–ம் மனுதாரரை அடித்து வீட்டைவிட்டு வெளியே தள்ளிவிட்டதாகவும், மனுதாரர் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் எதிர்மனுதாரரிடம் கேட்டதற்கு அவர்களை எதிர்மனுதாரர் அடிக்க வருவது மட்டுமல்லாமல் காமக்குரோத வார்த்தைகளால் திட்டி அசிங்கப்படுத்தியதாகவும், எதிர்மனுதாரர் 1, 2 மனுதாரர்களையும் அழைத்து கொண்டு பெற்றோர் மற்றும் உறவினர்கள் சென்றுவிட வேண்டும் இல்லையெனில் 1, 2 மனுதாரர்களை அடித்தே கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியதாகவும், எதிர்மனுதாரர் சிங்கப்பூரில் வேலை பார்த்து மாதம் ஒன்றுக்கு ரூ.2,00,000/–ம் வரை சம்பாதித்து வருவதாகவும், மேலும் எதிர்மனுதாரருக்கு ரூ.50,00,000/–ம் மதிப்பில் வீடும், ரூ.50,00,000/–ம் மதிப்பில் விளை நிலங்கள் உள்ளதாகவும், 1–ம் மனுதாரர் தனது குழந்தையுடன் தனது பெற்றோர் வீட்டில் வசித்துக் கொண்டு உணவு, உடை மருத்துவ செலவிற்காக மிகவும் கஷ்டப்பட்டு வருவதாகவும் கூறியுள்ளார்.

7. 1ம் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். 1ம் மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 ஆக 17.09.2015ம் தேதியிட்ட 1ம் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே நடந்த திருமண அழைப்பிதழ் அசல் செய்யப்பட்டுள்ளது. 1ம் மனுதாரர் மனுவில் கூறி இருக்கும் சங்கதிகளை உறுதிப்படுத்தும் விதத்தில் சாட்சியம் அளித்துள்ளார். 1ம் மனுதாரரின் மனு மற்றும் 1ம் மனுதாரர் தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தபோது 1ம் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 17.09.2015ம் தேதி திருமணம் நடைபெற்று கீர்த்திவாசன் என்ற ஆண் குழந்தை உள்ளது என்பது தெரிய வருகிறது. 1ம் மனுதாரர் கூறியுள்ள சங்கதிகளை மறுத்து எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தி 1ம் மனுதாரருக்கு குடும்ப வன்முறை இழைக்கவில்லை என்று நிரூபணம் செய்யவில்லை என்பதால் 1ம் மனுதாரர் கூறியுள்ள சங்கதிகளை

எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டதாகவே இந்நீதிமன்றம் அனுமானிக்கின்றது. எனவே, 1ம் மனுதாரரை வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தி உள்ளார் என்றும், 1ம் மனுதாரர் மற்றும் 2ம் மைனர் மனுதாரருக்கு கொடுக்க வேண்டிய பண உதவியும், எதிர்மனுதாரர் செய்யாமல் 1ம் மனுதாரரையும் 2ம் மைனர் மனுதாரரையும் அவரது பெற்றோர் வீட்டிற்கு அனுப்பியுள்ளார் என்றும் தெரிய வருகிறது. அதன் பின்பு 1ம் மனுதாரரை எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வைக்க முயற்சி எடுத்தும் பலன் அளிக்கவில்லை என்றும், எதிர்மனுதாரர் சிங்கப்பூரில் வேலை பார்த்து வருவதும், 1ம் மனுதாரரையும், 2ம் மைனர் மனுதாரரையும் பார்க்கவும் இல்லை என்றும், தொடர்பு கொள்ளவில்லை என்றும் தெரிய வருகிறது. 1ம் மனுதாரர் தனது ஆண் குழந்தையுடன் வாழ்வதற்கு கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும் கூறியுள்ளார். எனவே, எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருக்கு திருமணத்திற்கு பின்பு இழைத்துள்ள குடும்ப வன்முறை காரணமாக எதிர்மனுதாரரை விட்டு 1ம் மனுதாரர் பிரிந்து வாழ்ந்து வரும் நிலையில் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரையும், 2ம் மைனர் மனுதாரரையும் பராமரிக்காமல் இருந்து வருவதால் மனுதாரருக்கும், 2ம் மைனர் குழந்தைக்கும் எதிர்மனுதாரர் பொருளாதார ரீதியாகவும், 1ம் மனுதாரரை திருமணத்திற்கு பின்பு வரதட்சணை கேட்டு வாய்மொழி ரீதியாகவும், மனரீதியாகவும் வன்முறை இழைத்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே 1ம் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரால் குடும்ப வன்முறைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார் என்பதை தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் இந்நீதிமன்றத்தில் நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**பிரச்சனை 2**

8. 1ம் மனுதாரர் பிரிவு 18ன் கீழ் பாதுகாப்பு கட்டளை வழங்க உத்தரவு கோரியுள்ளார். மேற்படி மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் தற்போது 1ம் மனுதாரர் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து தனது பெற்றோர் வீட்டில் வசித்து வருவதாக தெரிவித்துள்ளார். 1ம் மனுதாரர் எதிர்மனுதாரரை பிரிந்த பின்பு எதிர்மனுதாரரால் 1ம் மனுதாரருக்கு குடும்ப வன்முறை எதுவும் இழைக்கப்பட்டதாக 1ம் மனுதாரர் மனுவிலும், சாட்சியத்திலும் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே தற்போதைய சூழ்நிலையில் 1ம் மனுதாரருக்கு பிரிவு 18ன் கீழ் குடும்ப வன்முறை சட்டப்படி

பாதுகாப்பு உத்தரவு வழங்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே 1ம் மனுதாரருக்கு பிரிவு 18ன் கீழ் குடும்ப வன்முறை சட்டப்படி பாதுகாப்பு உத்தரவு கிடைக்கதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>பிரச்சனை 2</u>**

9. 1ம் மனுதாரர் பிரிவு 19ன் கீழ் உறைவிடக் கட்டளை அல்லது அதற்கான வாடகை செலுத்த வேண்டும் என கோரியுள்ளார். 1ம் மனுதாரர் தனது மனுவிலும், நிரூபணவாக்குமூலத்திலும் 1ம் மனுதாரரும், 2ம் மைனர் மனுதாரரும் தற்போது தனது பெற்றோர் வீட்டில் வசித்து வருவதாக கூறியுள்ளார். மேற்படி 1ம் மனுதாரர் தரப்பு சங்கதிகளைப் பொறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யவில்லை. எனவே, 1ம் மனுதாரர் தொடர்ந்து எதிர்மனுதாரர் வீட்டில் நுழையும் இடத்தில் தொடர்ந்து இருப்பதற்கு உரிமை அளித்து கட்டளை வழங்க வேண்டும் என்ற பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றும், 1ம் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் வசித்து வரும் வீட்டில் குடியமர்த்துவதற்கு விரும்பவில்லை என்றால் அதே அளவில் இருப்பிட வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் அல்லது அதற்கு வாடகை செலுத்த வேண்டும் என்ற பரிகாரம் 1ம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்றும், எனவே, எதிர்னுதாரர் 1ம் மனுதாரருக்குரிய இருப்பிட வசதியை ஏற்படுத்திக்கொடுக்க தவறும் போது மாற்று உறைவிடத்திற்கான வாடகையை எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருக்கு செலுத்தி வைக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிட்டு 1ம் மனுதாரர் எதிர்மனுதாரரிடமிருந்து மாற்று உறைவிடத்திற்கான வாடகை பெற உரிமையுடையவர் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே, பிரிவு 19ன் கீழ் 1ம் மனுதாரருக்கு எதிர்மனுதாரரிடமிருந்து மாற்று உறைவிடத்திற்கான வாடகை ரூ.5,000/-ம் கிடைக்கதக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>பிரச்சனை</u>** <u>3</u>

10. 1ம் மனுதாரருக்கு பிரிவு 19(8) குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005ன் படி 1ம் மனுதாரருக்கு திருமணத்தின்போது 24 பவுன் நகையும், எதிர்மனுதாரருக்கு 6 பவுன் நகை, வாகனம் வாங்கி கொள்வதற்காக ரூ.80,000/-ம் ரொக்கம் மற்றும் சீர்வரிசை சாமான்கள் அனைத்தும் மனுதாரருக்கு

திரும்ப ஒப்படைக்கும்படி உத்தரவிடக் கோரியுள்ளார். மனுதாரர் தனது மனுவிலும் நிரூபணவாக்குமூலத்திலும், திருமணத்தின்போது மனுதாரருக்கு24 பவுன் நகையும், எதிர்மனுதாரருக்கு 6 பவுன் நகை, வாகனம் வாங்கி கொள்வதற்காக ரூ.80,000/-ம் ரொக்கம் மற்றும் சீர்வரிசை சாமான்கள் கொடுத்ததாகவும் கூறியுள்ளார். மேற்படி 1ம் மனுதாரர் தரப்பு சங்கதிகளைப் பொறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யவில்லை. மேற்படி சங்கதியை நிரூபிக்கும் பொருட்டு ம.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எனவே 1ம் மனுதாரரின் நகைகள் மற்றும் சீர்வரிசைப்பொருட்கள் எதிர்மனுதாரரின் வசம் உள்ளது என்பதை தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் 1ம் மனுதாரர் நிரூபிக்க தவறியுள்ளதால் பிரிவு 19(8) ன் படியான பரிகாரம் 1ம் மனுதாரருக்கு கிடைக்கதக்கது அல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

<u>பிரச்சனை 4</u>

11. மனுதாரர் பிரிவு 20ன் கீழ் பண உதவி தொகை கோரியுள்ளார். 1ம் மனுதாரர் தனது மனுவில், 1ம் மனுதாரருக்கும், 2ம் மைனர் மனுதாரருக்கும் உணவு, உடை, மருத்துவ தேவை போன்ற அத்தியாவசிய வாழ்க்கை பராமரிப்புக்காக மாதம் ஒன்றுக்கு தலா ரூ.25,000/-ம் எதிர்மனுதாரர் ஜீவனாம்சமாக வழங்க வேண்டுமென கோரியுள்ளார். மனுதாரர் தனது மனுவிலும், நிரூபண வாக்குமூலுத்தில் கூறியுள்ள படி எதிர்மனுதாரர் சிங்கப்பூரில் வேலை பார்த்து மாதம் ஒன்றுக்கு ரூ.2,00,000/-ம் வரை சம்பாதித்து வருகிறார் என்று 1ம் மனுதாரர் தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை. இருப்பினும், 1ம் மனுதாரரின் மனு மற்றும் சாட்சியத்தை ஒரு சேர பரிசீலனை செய்கையில் எதிர்மனுதாரர் இதுநாள் வரை 1ம் மனுதாரரையும், 2ம் மைனர் மனுதாரரையும் பராமரிக்காமல் இருந்து வருகிறார் என்பதை அறிய முடிகிறது. எதிர்மனுதாரரே 1ம் மனுதாரரையும், 2ம் மைனர் மனுதாரரையும் பராமரிக்க கடமைப்பட்டவராவார். மேலும், 1ம் மனுதாரரை எதிர்மனுதாரர் அவர் வாழும் வாழ்க்கை சூழ்நிலை மற்றும் தரத்திற்கு ஏற்ப பராமரிக்க வேண்டியது அவருடைய கடமையாகும். மேலும் 1ம் மனுதாரருக்கும், 2ம் மைனர் மனுதாரருக்கும் தேவைப்படும் மருத்துவ செலவுகள் மற்றும் அடிப்படை செலவுகளுக்கு எதிர்மனுதாரரே செலுத்துவதற்கு கடமைப்பட்டவர் ஆவார். எனவே மனுதாரர்

எதிர்மனுதாரரிடமிருந்து பண உதவி தொகை பெற உரிமையுடையவர் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே, தற்போதைய விலைவாசி, குழந்தையின் பராமரிப்பு, மருத்துவ செலவுகள், இதர செலவுகள், வாழ்க்கை சூழ்நிலை, தரப்பினர்களின் தகுதியை கருத்திற்கொண்டு பார்க்கும்போது எதிர்மனுதாரர் மனுதாரருக்கும், மைனர் குழந்தைக்கும் பண உதவி தொகையாக ரூ.10,000/– வழங்கவேண்டும் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**பிரச்சனை 5**

12. மனுதாரர் பிரிவு 22ன் கீழ் ரூ.50,00,000/– இழப்பீடு 1ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என கோரியுள்ளார். ஆனால் அவ்வளவு பெரிய தொகையை இழப்பீடாக பெறுவதற்கு போதிய காரணங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. இருப்பினும் மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை கருத்தில் கொண்டும், மனுதாரரின் சங்கதிகளை கருத்தில் கொண்டும், மனுதாரரின் குழந்தைகளின் பராமரிப்பை கருத்தில் கொண்டும், 1ம் எதிர்மனுதாரரின் வருமானத்தை கருத்தில் கொண்டும் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.30,000/–வழங்க உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

13. **முடிவில், இம்மனுவானது பகுதியாக அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

1) மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் பிரிவு 19ன் கீழ் மாற்று உறைவிடத்திற்கான வாடகை மாதம் ரூ.5,000/– வழங்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. இம்மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து கணக்கிட்டு மாற்று உறைவிடத்திற்கான வாடகை தொகையினை ஒவ்வொரு மாதமும் முதல் 5 தேதிக்குள் கொடுக்க வேண்டியது எனவும் இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

2) மனுதாரருக்கும், மைனர் குழந்தைக்கும் 1ம் எதிர்மனுதாரர் பிரிவு 20ன் கீழ் ரூ.10,000/– பணஉதவி தொகை வழங்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. இம்மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து கணக்கிட்டு பணஉதவி தொகையினை ஒவ்வொரு மாதமும் முதல் 5 தேதிக்குள் கொடுக்க

வேண்டியது எனவும் இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது. மனுதாரருக்கு மறுமணம் ஆகும் வரையிலும், மைனர் மனுதாரருக்கு உரிய வயது அடையும் வரையிலும் 1ம் எதிர்மனுதாரர் பண உதவி தொகை வழங்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

3) மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையாக ரூ.30,000/- வழங்கவேண்டும் என இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் மனுதாரருக்கு வழங்கவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

4) இருதரப்பினர்களின் உறவு முறையை கருத்தில் கொண்டு அவர்களது செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

(ஒப்பம்) K. கமலநாதன்,
நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.(மு.கூ.பொ)

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:</u>**

ம.சா.1 – திருமதி. மோனிஷா

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

ம.சா.ஆ.1 – 17.09.2015 தேதியிட்ட திருமண பத்திரிக்கை அசல்

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>** இல்லை

(ஒப்பம்) K. கமலநாதன்,

நீதித்துறை நடுவர் எண்.1

மயிலாடுதுறை. (மு.கூ.பொ)